உண்மைக்குப் புறம்பான தகவலாகும். தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு எங்கள் அரசு என்றும் தயங்கியது இல்லை (மேசையைத் தட்டும் ஒலி). என்றும் தயங்காது. மக்களுக்கு ஏற்படுகின்ற இடையூறுகளைக் களைவதற்குத்தான் அரசாங்கமும் அதிகாரமுமே தவிர வெறும் அரசியல் இலாபத்திற்காக பயந்துகொண்டு கைகட்டி நின்று வேடிக்கை பார்த்து கொண்டிருப்பதற்கு அல்ல. அந்தச் சம்பவத்தில் பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்தியவர்கள் மீதும், பொது அமைதிக்கு பங்கம் விளைவித்தவர்கள் மீதும் சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–40*

**(ஆ) மதுரை மாவட்டம் போடியில் தி.மு.க. பொதுக்கூட்டத்தின்போது நடந்த சம்பவங்கள் குறித்து**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த பிரச்சினை. மதுரை மாவட்டம் போடியில் 18ஆம் தேதி நடைபெற்ற தன் கட்சியின் பொதுக்கூட்டம் ஒன்றில் அசம்பாவித சம்பவங்கள் நடந்தது பற்றிப் பேரவையில் எழுப்பவேண்டுமென்று திரு. இளம்வழுதி என்னிடத்தில் ஒரு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார். அந்தப் பிரச்சினையில் அவர் பேரவையின் இன்னொரு உறுப்பினர்மீது கடும் குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிற காரணத்தினால், அவரிடத்திலே விளக்கம் பெற்று நான் அனுமதிக்கிறேன் எனறு தெரிவித்தேன். மாண்புமிகு போடியினுடைய சட்டமன்ற உறுப்பினர் இங்கே இன்னும் வர இயலாத நிலையிலே இருக்கின்ற காரணத்தினால் அவருடைய விளக்கத்தைப் பெற இயலாத சூழ்நிலையில், இந்தப் பிரச்சினையில் அவரை இழுத்து இங்கே பேசுவதற்கு அனுமதிக்க இயலாது. இருந்தாலும் அந்தப் பிரச்சினையைப் பற்றி மட்டும் உறுப்பினர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று சொன்னால்--வேறு எதையும் இழுக்காமல்-- அந்தச் சம்புவத்தைப் பற்றி மட்டும்சொல்லி, ,அதில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்று மட்டும் கேட்கலாம்.

**திரு. இளம்வழுதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 18ஆம் தேதி மதுரை மாவட்டம் போடியிலே தேவர் சிலை அருகே எங்கள் கட்சியினுடைய துணைப் பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான மரியாதைக்குரிய நாஞ்சிலார் அவர்கள்

*1995 மார்ச் 20*] [திரு. இளம்வழுதி]

கலந்துகொள்ளக் கூடிய பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு அந்த பொதுக்கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்திலே நம்முடைய ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த மன்றத்தில் உறுப்பினராக இருக்கக்கூடிய ஒருவருடைய தலைமையிலே சென்று அங்கே கலகம் விளைவித்தது அனைத்து பத்திரிகைகளிலும் வந்து இருக்கிறது. தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இரும்புக் கழிகள், இரும்புத் தடிகள் எல்லாம் எடுத்து சென்று, அது மட்டுமல்லாமல் ஒரு முன்னாள் அமைச்சர் என்ற மரியாதைகூட இல்லாமல், மேடை ஏறி, மேடையிலிருந்த மைக்-ஐ பிடுங்கியிருக்கிறார்கள். 'மனோகரா பேச்சை நிறுத்து' என்று சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, நீங்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறீர்கள். அந்த உறுப்பினரிடம் விளக்கம் பெறுவதற்கு அவர் இங்கு வரவில்லை என்று. ஆனால் பத்திரிகையிலே அவரே பேட்டி கொடுத்திருக்கிறார். நான் எதையும் (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அதைத் தான் சொன்னேன். நம் விதியிலே இருக்கிறது. ஒரு அறிவிப்புக் கொடுக்கிறபோது நான் அந்த உறுப்பினரிடம் விளக்கம் பெற்றுத்தான் அதற்கு மேற்கொண்டு அவருக்கு நான் இங்கே பேச வாய்ப்புக் கொடுக்கவேண்டும். நீங்கள் அறிவிப்புக் கொடுத்த நேரத்திலேயே சொன்னேன். (குறுக்கீடு) அதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று மட்டும் கேட்கலாம்.

**திரு. இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் கவனத்திற்கு இதைக் கொண்டு வந்ததற்குக் காரணமே இந்தச் சம்பவங்கள், இது ஏதோ அன்றைக்கு மட்டும் நடைபெற்றது மட்டுமல்ல. தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகிறது. காரைக்குடியிலே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினை பற்றித்தான் அறிவிப்பு எனக்குக் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) இதைப்பற்றி மட்டும் நீங்கள் கேட்டுவிட்டீர்கள் அல்லவா. நீங்கள் உட்காரலாம். (குறுக்கீடு) தொடர்ந்து இதைப்போல பல பிரச்சினைகளைச் சொன்னால் ஒவ்வொரு பிரச்சினைக்கும் நான் பதில் பெறமுடியாது.

**திரு. இளம்வழுதி:** நான் சொல்வதைச் சொல்லிவிடுகிறேன். கேட்டுவிட்டு வேண்டுமென்றால் நீங்கள் நீக்கிவிடுங்கள்.

[1995 மார்ச் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்வது அதற்குப் பினனாலே நீக்குவது என்பது எல்லாம் தெரியாமல் வந்துவிடுகிற கருத்துக்களை நீக்கலாமேயொழிய, 'நான் பேசுகிறேன், நீங்கள் நீக்குங்கள்' என்று சொல்வது அவ்வளவு சரியல்ல. இதைப் பொறுத்தவரையில் குறிப்பிட்ட ஒரு சம்பவத்தைப் பொறுத்து உங்களிடத்திலே எழுதி கொடுத்திருக்கிறார்கள். எனவே அதைப் பற்றி கவனத்திற்கு கொண்டு வரவேண்டும். அது விவாதம் கூட அல்ல. கவனத்திற்கு கொண்டுவரவேண்டும். இப்போதுகூட அது அதிகம் தான். இருந்தாலும்கூட நீங்கள் அனுமதிக்கிறீர்கள். அது பரவாயில்லை. ஆனால் அவர் கவனத்திற்கு கொண்டுவருவதோடு நிறுத்தவேண்டும். அடுத்து தொடர்புடைய வேறு சம்பவத்தைச் சொல்லி அவர் பேசுவது அது அவ்வளவு பொருத்தமாக இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்தோடு முடிக்கலாம். 'நான் இதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்' என்று கேட்டதோடு முடியுங்கள்'.

**திரு. இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை கவனத்திற்குக் கொண்டு வருவதற்குக் காரணமே, ஏன் இதுபோல தொடர்ந்து நடக்கிறது, இதுபோல தொடர்ந்து நடக்கக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடியிலே எங்கள் கட்சியினுடைய இன்னொரு இளைஞரணியைச் சார்ந்த (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் வேண்டாம். இதை அனுமதிக்கமுடியாது. இதற்கு நீங்கள் விளக்கம் கோரியிருக்கிறீர்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசின் சார்பில் இப்போது விளக்கம் அளிப்பார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வைரவன் என்பவரின் தலைமையில் போடியில் 17 மார்ச் 1995 அன்று ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அந்தப் பொதுக்

*1995 மார்ச் 20*] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

கூட்டத்தில் பேசிய பேச்சாளர்கள் என்னை மிகவும் தரக்குறைவான வார்த்தைகளால் தனிப்பட்ட முறையில் திட்டிப் பேசியதாகத் தெரிகிறது.

முற்பகல் *11–45*

*18* மார்ச் *1995* அன்று மீண்டும் போடிநாயக்கனூரில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அமர்நாத் என்பவரின் தலைமையிலே ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றுள்ளது. அதற்கு முன்தினம் நடந்த பொதுக்கூட்டத்தில் என்னைத் தரக்குறைவாகப் பேசியதனால், அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஆட்சேபனை தெரிவித்திருந்தனர். காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் தி.மு.க.வினருக்கு அறிவுரை வழங்கியுள்ளார். இருந்தும் அந்தக் கூட்டத்தில் அமர்நாத் என்னை மிகவும் தரக்குறைவான வார்த்தைகளில் வசைபாடியதாகத் தெரிகிறது. அரசியல் பொதுக் கூட்டம் என்ற போர்வையில் என்னைத் தனிப்பட்ட முறையில் வசைபாடியதற்கு போடிநாயக்கனூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் மற்றும் சிலர் கூட்டம் நடந்த இடத்திற்குச் சென்று காவலர்களிடம் தங்களது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளார்கள். இந்தச் சூழ்நிலையில் கூட்டத்தில் இருந்த திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் மற்ற சிலரும் ஆட்சேபனைத் தெரிவிக்க வந்தவர்களைக் கண்டு ஆத்திரம் அடைந்து அவர்கள்மீது கற்களை வீசித் தாக்கியுள்ளார்கள். இந்தக் கல்வீச்சினைத் தொடர்ந்து நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர காவல் துறையினர் முற்பட்டபோது, போடிநாயக்கனூர் காவல் துறை ஆய்வாளர் மற்றும் ஒரு காவலர் ஆகியோருக்குக் காயம் ஏற்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து சோடா பாட்டில்களும், கற்களும் தொடர்ந்து வீசப்பட்டதாகத் தெரிகின்றது.

பொதுக்கூட்டம் சிறிது நேரம் தடைப்பட்டாலும் திரு. நாஞ்சில் மனோகரன் அவர்கள் அந்த இடத்திற்கு வந்த பிறகு இரவு *11* மணி அளவில் கூட்டம் மீண்டும் துவங்கி இருக்கிறது. அவர் அந்தக் கூட்டத்தில் *15* நிமிடங்கள் பேசியதாகத் தெரிகின்றது. அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினரும் மற்றும் *9* பேரும் இந்தச் சம்பவத்தில் காயம் அடைந்து போடி அரசு மருத்துவமனையில் வெளி நோயாளிகளாக சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ளார்கள். அதேபோல அமர்நாத் மற்றும் தி.மு.க.வைச் சேர்ந்த இரண்டு பேரும் இந்தச் சம்பவத்தில் காயமடைந்து போடி அரசு மருத்துவமனையில் வெளி நோயாளிகளாக சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ளார்கள். போடி சட்டமன்ற உறுப்பினர் கொடுத்த

புகாரின்மீது போடி காவல்நிலைய குற்ற எண் 90/95-ல் இந்தியத் தண்டனைச் சட்டம் 147, 148, 307 153 (A) ஆகிய பிரிவுகளின் கீழ் அமர்நாத், சுந்தரம், சுந்தரராஜன், மூக்கையா, கணேசன், பாலு, மணிவேல், வைரவன், ஈஸ்வரன் மற்றும் சிலர்மீது வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. அசம்பாவிதம் ஏதும் நடைபெறாமல் இருக்க காவல் துறையினர் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரித்துள்ளனர். தற்போது அங்கு பூரண அமைதி நிலவுகிறது.

தமிழ் உணர்வு, தமிழ் கலாச்சாரம், தமிழ்ப் பண்பாடு என்று எல்லாம் சிலர் மேடைகளில் முழங்குவது வெறும் அலங்கார வார்த்தைதான். ஏனென்றால் அது செயல்பாட்டில் வரும்போது அவற்றைப் பலர் கடைப்பிடிப்பதில்லை என்பது வேதனைக்குரிய ஒன்றாகும். சொல் ஒன்றும், செயல் ஒன்றும் ஆன இரட்டை வேடம் இங்கு மலிந்துவிட்டது. உலக நாகரீகத்திற்கே வழிகாட்டிய தமிழ்ப்பெருங்குடி மக்கள் பெண்களுக்கு சங்க காலத்தில் இருந்தே சமுதாயத்தில் ஒரு தனி இடத்தையும், மதிப்பையும் அளித்து வந்தார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். பெண்களைத் தெய்வமாக வழிபடுவதும், பெண்களைத் தாயாகவும், சகோதரியாகவும் மதித்துவந்த மாபெரும் கலாச்சாரத்தை, பாரம்பரியத்தைப் படைத்த தமிழ்நாட்டில் இன்று அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவும், தனிப்பட்ட பொறாமையின் காரணமாகவும் சிலர் நாலாந்தர பாணியில், கீழ்த்தரமான முறையில் பேசுகின்ற ஒரு நிலை ஏற்பட்டுள்ளதற்கு யார் காரணம்? இந்த நாட்டு மக்களுக்கும், எனது அன்பிற்குரிய சகோதர சகோதரிகளுக்கும், இந்த அநாகரீகத்திற்குப் பொறுப்பாளர்கள் தகுந்த நேரத்தில் பதில் சொல்லியே ஆக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுக் கூட்டங்களில் பேசுபவர்கள் அவை அடக்கத்துடன் கட்டுப்பாட்டுடன் தாங்கள் கூற வந்த கருத்துக்களை எடுத்துரைப்பதில் தவறு இல்லை. குற்றம் குறை சொல்லிப் பேசுவதும் தவறில்லை. கற்பனை செய்துகொண்டு கதை அளப்பதும் தவறில்லை. ஆனால், தமிழ் கலாச்சாரத்தையும், தமிழ்ப் பண்பாட்டையும் மறந்து, மற்றவர்கள் வெட்கத்தால் கூனிக் குறுகிப் போகும் அளவிற்கு, மற்றவர்கள் மனத்தை வேதனைப்படுத்தும் வகையில் கொச்சையாகப் பேசுவதும், வக்கிரமான கருத்துக்களை எடுத்துக் கூறுவதும் இன்று சாதாரண நடவடிக்கையாகி விட்டது. அரசியலில் நேருக்கு நேர் எதிர்த்து சமாளிக்க முடியாதவர்கள் கோழைத்தனமாக (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) மேடையில் உட்கார்ந்துகொண்டு விமர்சிப்பதும், பொறாமையினால் சிலர்

*1995 மார்ச் 20]* [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

மற்றவர்களைத் தூண்டிவிட்டுப் பேச வைப்பதும் எந்த விதத்தில் நியாயம்? அரசியல் கட்சிகள் பொதுத் தேர்தலைச் சந்திக்கும்போது இதே மக்கள் மன்றத்திற்கு முன்பு அவர்கள் பதில் சொல்லியாக வேண்டும். அப்போது இதற்கு எல்லாம் மக்கள் தீர்ப்பு வழங்கிவிடுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. *(மேசையைத் தட்டும் ஒலி).*

இந்த வழக்கில் காவல் துறையினர் தகுந்த நடவடிக்கை எடுத்து வழக்குப் பதிவுசெய்து மேல்விசாரணை செய்து வருகிறார்கள். எங்கள் அரசு எப்போதும் பாரபட்சம் இன்றி, நடுநிலையோடு தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். *(குறுக்கீடு)*

*முற்பகல் 11–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் ஒன்றும் இல்லை, உட்காருங்கள். *(குறுக்கீடு).* இதற்கு மேலே பேசினால் நானே பேச வேண்டி வந்துவிடும். *(குறுக்கீடு).* இதற்குமேலே இந்தப் பிரச்சினையில் ஏதாவது ஒரு வார்த்தை நீங்கள் பேசினால் கூட--பேரவைத் தலைவர் என்ற முறையில் இன்னும் என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறேன்--*(குறுக்கீடு)* இல்லை, உட்காருங்கள். *(குறுக்கீடு)* சிறப்பு கவன ஈர்ப்பில் விடுவதில்லை. *(குறுக்கீடு)* இதற்குமேல் இந்தப் பிரச்சினையை நீங்கள் வளர்க்க விரும்பினால் அது நல்லதல்ல *(குறுக்கீடுகள்)*

**திரு. இளம்வழுதி:** நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

*(திரு. இளம்வழுதி வெளியேறினார்) (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளிநடப்புச் செய்கிற உறுப்பினர் இந்தமாதிரி வருவது முறையல்ல. *(குறுக்கீடு)* திரு. பரிதி இளம்வழுதியை அவையை விட்டு வெளியேற்ற உத்தரவிடுகிறேன்.

*(திரு. இளம்வழுதி அவையை விட்டு வெளியேறினார்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போவது, வருவது என்றால் இது என்ன முறை. உங்களுடைய கட்சிக்கூட்டங்களிலும் இந்தமாதிரி நடந்திருக்கிறது. ஆத்திரமூட்டும் வகையில் ஏதாவது பேசுவது, பேசிவிட்டு வந்து, ஏதாவது பிரச்சினையைக் கிளப்புவது.